Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது . .

## ஆவிக்குரிய வளர்ச்சி

### வேத ஆராய்ச்சி பாடங்கள்

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை - 6.30 மணி முதல் 8.30 மணி வரை
இடம்: ஏ-4, டேஜூ ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.
( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )
( பாரத ஸ்டேட் பாங்க்கின் மாடி )

**வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்**



**தேவன்** நமக்குப் **பயமுள்ள ஆவி**யைக் கொடாமல்,
**அன்பு**ம்
**பலமு**ம்
**தெளிந்த புத்தியுள்ள ஆவி**யையே கொடுத்திருக்கிறார்
– 2 தீமோத்தேயு 1:7

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

VOL . 4 ISSUE . 11
தனிப்பிரதி ரூ 20/= ஜூன் 2011

# ஏக்காளம்



அன்பு பலம் தெளிந்த புத்தியுள்ள ஆவி

# அன்பும் பயமும் தெளிந்த புத்தியும்

நிஜா சென்னை



**மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.** (நீதிமொழிகள் 29:25). நம்மில் அநேகர் மனிதர்களுக்கு பயந்து வாழ்கிறவர்களாய் இருக்கிறோம். சிலர் சில குறிப்பிட்ட மனிதர்களைப் பார்த்தாலே பயந்து நடுங்குவார்கள். உயர் அதிகாரிகள், வயதில் மூத்தவர்கள், தாய் தகப்பன் இவர்களிடம் வரும் பயம் மரியாதையினால் வருவது. இவர்களை நாம் மதித்து அவர்களுக்குரிய கனத்தை நாம் கொடுக்க வேண்டும். ஆனால், அவர்களுக்கு பயப்படக்கூடாது. நம்மிடத்தில் பாவம் இருந்தால்தான் நாம் பயப்படவேண்டும். பாவம் செய்தவர்கள்தான் மற்றவர்களுக்கு பயந்து வாழ்வார்கள். ஆதாம், ஏவாள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்தபோது அவர்களுக்குள் பயம் உண்டானது.

நம் மனசாட்சி சுத்தமாக இருக்கும்போது, நாம் எந்த மனிதர்களுக்கும் பயப்பட அவசியமேயில்லை. அப்படி பயப்படவும் கூடாது. மனுஷனுக்கு பயந்திருந்தால் நாம் செய்யும் காரியங்களும் நமக்கு கடினமாகிவிடும். பயம் என்பது வலையைப் போன்றது. நாம் மனிதர்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களுக்கு பயந்து வாழ்ந்தால், நாம் பலவிதமான சிக்கல்களில் மாட்டிக் கொள்வோம். நம்மால் அந்த பிரச்சனைகளிலிருந்து வெளியே வரமுடியாது. நாம் பாதுகாப்பை இழந்து விடுகிறோம். ஆனால், கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கும்போது, நாம் பாதுகாப்பாய் இருப்போம். கர்த்தருக்கு பயப்படும் பயம் என்பது, அவர்மேல் உள்ள பயபக்தியினால், மதிப்பினால், நம்பிக்கையினால் வருவது. கர்த்தரின் மகத்துவங்களையும், அன்பையும், பரிசுத்தத்தையும், அவரது குணநலன்களையும் தியானித்து அவருக்குரிய கனத்தைக் கொடுப்பதாகும். கர்த்தரை நம்பி, அவருக்கு பயந்து வாழ்பவர்கள் வாழ்க்கையில் மற்றவர்கள் தீங்கு செய்ய திட்டமிடும்போதோ அல்லது தீமை செய்யும்போதோ கர்த்தர் அதை நன்மையாக மாற்றிப்போடுவார். மனிதர்களால் நம் சரீரத்திற்கு மட்டுமே தீங்கு விளைவிக்க முடியுமேயொழிய வேறொன்றும் செய்ய முடியாது. ஆத்துமாவுக்கு ஊறுவிளைவிக்க அவர்களால் முடியாது. **ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்குப் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்** (மத்தேயு 10:28). புல்லுக்கு ஒப்பான, ஒன்றும் செய்ய திராணியில்லாத மனிதர்களைப் பார்த்து நாம் பயப்படக்கூடாது. சரீரத்தோடு ஆத்துமாவையும் சேர்த்து கொல்லக்கூடிய தேவனிடம் மட்டுமே நமக்கு பயம் இருக்கவேண்டும். நாம் தேவனுக்கு பயந்து வாழும்போது, அவர் நமக்கு பாதுகாப்பாக இருப்பார். எந்த தீமைகளும் நம்மை அண்டாதபடி காப்பார்.

**நாம் செய்த பாவங்களுக்கான தண்டனையை இயேசுகிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்தார்** (ஏசாயா 53:4,5). நாம் மனந்திரும்பி பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பை பெற்றுக் கொள்ளும்போது, நம் பாவங்களை அவருடைய இரத்தத்தினாலே கழுவி நம்மை சுத்திகரிக்கிறார். அப்படி இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அவரை அப்பா பிதாவே என்று அழைக்கும் பாக்கியத்தை பெறுகிறார்கள். நம் பாவங்கள் கழுவப்பட்டதினால், நாம் சுத்த மனச்சாட்சியுள்ளவர்களாகி விடுகிறோம். பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறோம். நாம் பாவத்திலிருந்து விடுதலைபெற தேவன், தம் சொந்த குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பி, நம்மேல் அவர் வைத்த அன்பை வெளிப்படுத்தினார். தேவனுடைய பிள்ளைகளுக்கு தண்டனை கிடையாது. நரகத்தில் தள்ளப்படுவோம் என்ற பயம் இருக்காது. **அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல** (1 யோவான் 4:18). தேவன் நம்மை முழுமையாக நேசிக்கிறார். அவர் நம்மேல் வைத்துள்ள அளவிடமுடியாத அன்பை நினைத்துப் பார்த்து, அந்த அன்பின்மேல் நம் கவனத்தை செலுத்தும்போது, பயத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளலாம். தேவ அன்பு நம் பயத்தை நீக்கி நமக்கு தைரியத்தைக் கொடுக்கிறது.

பிள்ளைகள், தகப்பனும், தாயும், சண்டையிடுவதைப் பார்த்து அவர்கள் மனது பயத்தால் பாதிக்கப்படுகிறது. தன் தகப்பன், தாயை அடிப்பதைப் பார்த்ததும், தன் தாய் தனது தகப்பனாரை அடிப்பதைப் பார்த்ததும் பிள்ளைகள் அதிர்ச்சிக்குள்ளாகி, எப்பொழுதும் ஒருவித பயத்திலேயே இருப்பார்கள். தாயும், தகப்பனும் பிள்ளைகளை கண்மூடித்தனமாக காயப்படும்படியாக அடிப்பதால் பிள்ளைகள் பயந்து நடுங்குவார்கள். பெற்றோர் மனஅழுத்தத்தோடு இருக்கும்போது, அதை வெளிப்படுத்த, அப்பாவி பிள்ளைகளின்மேல் தங்களது கோபத்தை வெளிப்படுத்துவார்கள். அதனால் பிள்ளைகள் பெற்றோருக்கு பயந்து நடுங்குவார்கள். இவர்கள் வெளிப்படையாக பெற்றோரிடம் பேச மாட்டார்கள்.

அநேக குடும்பங்களில் கணவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருப்பதால், தினமும் மனைவியிடம் சண்டையிட்டு அவர்களை அடிப்பார்கள். சில குடும்பங்களில், கணவன், மனைவியை அடிமையைப்போல நடத்துவார்கள். அதனால் மனைவிமார் கணவனுக்கு பயந்துகொண்டே வாழ்வார்கள். சில குடும்பங்களில் மனைவி கர்த்தருக்கு பயந்து வாழாததால், அநேக கணவன்மார் மனைவிக்கு அடிமைகளாக பயந்து பயந்து அனுதினமும் வாழ்வார்கள். இதுவே அவர்களுடைய கண்ணி. இன்ன காரியத்தை செய்தால் மனைவிக்கு பிடிக்காது என்பதால் அதை செய்யவே பயப்படுவார்கள். அவர்கள் செய்கிற காரியம் கர்த்தருக்கு பிரியமில்லாததாய் இருந்தாலும்கூட, மனைவிக்கு பிரியமாய் இருப்பதால் அதையே செய்வார்கள். கணவன்மார் கர்த்தரை அறிந்துகொள்ளும்போது, கர்த்தரை நம்பி அவருக்கு பயந்து அவரை சார்ந்து வாழ்வார்கள். மனைவிக்கு பயப்படமாட்டார்கள்.

கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளரும்போது, கர்த்தருக்கு பயந்து வாழ்வார்கள். ஒருவருக்கொருவர் பயந்து வாழமாட்டார்கள். ஒருவருக்கொருவர் அன்பாய், உதவியாய் இருப்பார்கள். மனைவியானவள், கணவனுக்கு கீழ்ப்படிந்து வாழவேண்டும். அவர்களுக்குரிய கனத்தை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு பயப்படக்கூடாது. கர்த்தருக்கு பயப்படும் பயம் நமக்கு வரும்போது, எந்த மனிதர்களுக்கும் பயப்படமாட்டோம்.

இன்னும் சிலர் மற்றவர்கள் தங்களை நல்லவர்கள் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு பயந்து வாழ்வார்கள். அவர்களிடம் நெருக்கமாக பழகி, அவர்களை பிரியப்படுத்தும் காரியங்களில் ஈடுபடுவார்கள். தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்வதால் கண்ணியில் மாட்டிக் கொள்வார்கள். வாழ்நாளெல்லாம் மனிதர்களுக்கு அடிமைகளாக சேவை செய்து கொண்டிருப்பார்கள். அவர்களால் அந்த கண்ணியிலிருந்து வெளியே வரமுடியாது. வெளியே வரவேண்டும் என்று நினைத்தாலும், வரமுடியாமல் தவித்துக் கொண்டிருப்பார்கள். இதற்கெல்லாம் காரணம் மனிதர்களுக்கு பயந்து வாழ்ந்ததினால்தான். மனிதர்கள் தங்களை என்ன நினைப்பார்கள் என்று எண்ணி, தேவனுக்கு பிரியமான வழியில் செல்லாமல் தாங்கள் விரும்பிய வழியில் சென்றதால்தான். மனிதர்கள் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்பதை விட்டு விட்டு கர்த்தர் நம்மை குறித்து என்ன நினைப்பார் என்று அவருக்கு பிரியமாய், அவருக்கு பயந்து நடக்க வேண்டும். கர்த்தருக்கு பயந்து வாழ்பவர்கள்தான், கர்த்தர் விரும்பிய வழியில் நடப்பார்கள். மனிதர்களுக்கு பயந்து வாழ்பவர்கள், தேவனுக்கு பிரியமல்லாத வழியில் நடப்பார்கள். கர்த்தருக்கு பயந்து வாழ்பவர்களை, கர்த்தர் இந்த கண்ணியில் மாட்டாதபடி பாதுகாப்பார். பிரிய மானவர்களே, கர்த்தருக்கு பயந்து அவருக்கு பிரியமாக வாழ நம்மை ஒப்புக் கொடுப்போம்.

## எகிப்தியருக்கு பயந்த ஆபிரகாம்

ஆபிரகாம் இருந்த தேசத்திலே பஞ்சம் வந்தபோது, அவன் எகிப்து தேசத்திற்கு சென்றான். அவனது மனைவி சாராள் மிகுந்த அழகுள்ளவளாக இருந்தாள். சாராளை தன்னுடைய மனைவி என்று சொன்னால், எகிப்தியர் தன்னை கொன்றுவிடுவார்கள் என்று பயந்து அவனை தன் சகோதரி என்று பொய் சொன்னான். எகிப்தியர் சாராளை ஆபிரகாமின் சகோதரி என்று நினைத்து, அவளை பார்வோனின் அரண்மனைக்கு கொண்டு சென்றனர். அப்பொழுது கர்த்தர் பார்வோனுக்கும், அவன் வீட்டாருக்கும் கொடிய வியாதி வரும்படி செய்தார். பார்வோன் ஆபிரகாமை அழைத்து, உன் மனைவியை அழைத்து போ என்று கூறினான். ஆபிரகாம் கர்த்தர் தன்னை



பாதுகாப்பார் என்ற விசுவாசம் இல்லாததால் பயத்துக்கு இடங்கொடுத்து கண்ணியில் மாட்டிக் கொண்டான். கர்த்தர் ஆபிரகாமுக்கு நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்று வாக்கு கொடுத்திருந்தார். அந்த வாக்கை விசுவாசிக்காமல் மனுஷனுக்கு பயந்து பொய் சொன்னான். என்றாலும், கர்த்தர் அவனை பாதுகாத்தார். நம் தலையிலுள்ள முடியையெல்லாம் எண்ணி வைத்திருக்கிற தேவன், நம்மை காக்க அக்கரையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய அனுமதியில்லாமல் ஒரு தீமையும் நம் வாழ்க்கையில் வராது.



## யூதருக்கு பயந்த பெற்றோர்கள்

**அவனுடைய தாய்தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள்** (யோவான் 9:22). இயேசு கிறிஸ்து பிறவிக் குருடனுக்கு கண்பார்வையை கொடுத்தார். இயேசு கிறிஸ்து, அவன் கண்களை திறந்த நாள்



ஓய்வு நாளாயிருந்தது. யூதர்கள், இயேசு கிறிஸ்து ஓய்வுநாள் பற்றிய சட்டங்களுக்கு கீழ்ப்படியாததினால் தேவனிடமிருந்து வரவில்லை என்றார்கள். மேலும், அவர்கள் பார்வை அடைந்தவனிடம், உன்னை குணமாக்கின இயேசுவைப் பற்றி நீ என்ன சொல்கிறாய் என்று கேட்டனர். அவன் ‘‘அவர் தீர்க்கதரிசி’’ என்று தைரியமாக கூறினான். யூதர்கள் அவன் பேச்சை நம்பாமல், அவன் தாய் தகப்பனை அழைத்து இவன் எப்படி பார்வையடைந்தான் என்று கேட்டனர். அவனுடைய தாய் தகப்பன்மார் இவன் எப்படி பார்வையடைந்தான் என்றும், இவனை குணமாக்கியது யார் என்றும் எங்களுக்கு தெரியாது என்றும் கூறினர். அவர்கள் யூதர்களுக்கு பயந்ததாலும், இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கை பண்ணினால் தேவாலயத்துக்கு புறம்பாக்க வேண்டும் என்று யூதர்கள் கட்டுப்பாடு வைத்திருந்ததால் இவனையே கேளுங்கள் என்று கூறினார்கள். தன் மகனைப் பார்வையடையச் செய்த இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தாமல், அவரைப் பின்பற்றாமல் மனிதர்களுக்குப் பயந்தார்கள்.

இப்பெற்றோர்கள் தன்னலமுள்ளவர்களாகவும், மனிதர்களுக்கு பயப்படுகிறவர்களாகவும் இருந்தனர். ஆனால், பார்வையடைந்த மகனோ, உண்மையைச் சொல்ல பயப்படவில்லை. ஏனென்றால், அவனது வாழ்க்கையில் அற்புத மாற்றம் நடந்தது. இயேசுகிறிஸ்து அவனுக்கு சுகத்தை கொடுத்து அவன் வாழ்க்கையை மாற்றிப்போட்டார். அவன் இயேசு கிறிஸ்து தேவனிடமிருந்து வந்திருக்க வேண்டும், இல்லையென்றால் இதுபோன்ற அற்புதத்தைச் செய்ய இயலாது என்று கூறினான். உடனே யூதர்கள் அவனை தேவாலயத்துக்கு புறம்பே தள்ளிவிட்டனர். பார்வையடைந்த மனிதனின் கண்கள் திறக்கப்பட்டதுமல்லாமல், அவன் ஆவிக்குரிய கண்களும் திறக்கப்பட்டது. அவன் யூதர்களுக்கு பயப்படாமல் இயேசு கிறிஸ்துவைக் குறித்து தைரியமாக பேசினான். நம்முடைய வாழ்க்கையிலும் நாம் எப்படியாக இருக்கிறோம்? இயேசு கிறிஸ்து எப்படியாக நம் வாழ்க்கையை மாற்றினார் என்பதைக் குறித்து சாட்சியாக சொல்ல வேண்டும். மற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்துவை நம்பி வாழவும், அவரை அறிந்து கொள்ளவும், நாம் தைரியமாக பேசி, அவர்களுக்கு உதவியாயிருக்க வேண்டும். நாம் அவரைப் பின்பற்றும்போது, மனிதர்கள் நம்மை கொடுமைப்படுத்தலாம். நியாயமற்ற முறையில் நடத்தி நம்மை துன்பப்படுத்தலாம். நம் நண்பர்களை நம் வாழ்க்கையை இழக்கலாம். ஆனால், இயேசு கிறிஸ்து கொடுக்கும் நிரந்தரமாக அவரோடுகூட வாழும் வாழ்க்கையை யாராலும் கொடுக்க முடியாது.

கிறிஸ்தவர்கள் என்ற பெயரைச் சொல்லிக் கொண்டு, இரட்சிக்கப்படாமல், பெயருக்கு கிறிஸ்தவர்களாக வாழ்கிறவர்கள், ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாதவர்கள், அவரை விசுவாசிக்காதவர்கள், குருடராயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து உலகத்திலுள்ள எல்லா மக்களின் பாவங்

களுக்காக சிலுவையில் அடிக்கப்பட்டு, இரத்தத்தை சிந்தினார். இப்படியாக நம்மேல் அவர் வைத்த அன்பை வெளிப் படுத்தினார். இந்த அன்பை முழுமன துடன் தியானிப்பவர்கள், அவரை ஏற்றுக் கொள்வார்கள். யூதர்கள் இயேசு கிறிஸ்து செய்த அநேக அற்புதங்களைப் பார்த்த போதும் அவரை விசுவாசிக்கவில்லை. அவர்களுடைய இருதயம் கடினமாய் இருந்தது. கண்களினால் பார்த்தும் இருதயத்தால் உணராமலும் இருந்தார்கள்.

**அநேக யூத தலைவர்கள், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். ஆனால், அவர்கள் பரிசேயருக்கு பயந்து, அதை வெளிப்படையாக அறிக்கை செய்யவில்லை. அப்படி இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய் தால் தங்களை தேவாலயத்துக்குப் புறம்பாக்கி விடுவார்கள் என்று பயந்தனர்** (யோவான் *12:42*). அவர்கள் தேவனால் வரும் மகிமையைவிட மனிதனால் வரும் மகிமையை அதிகமாய் விரும்பினார்கள். இன்றைக்கும் அநேகர் மனிதர்களுக்கு பயந்து இயேசு கிறிஸ்து வைப் பற்றி யாரிடமும் சொல்வதில்லை. தங்களை குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைத்து விடுவார்கள் என்றும், ஏளனம் செய்து விடுவார்கள் என்றும் நினைக் கிறார்கள். இயேசுவுக்காக வைராக்கிய மாக நிற்க யாரும் முன்வருவதில்லை. குறைந்த நாட்களே உயிர்வாழும், மாறிப் போகும் நிலையில்லாத மனுஷனால் வரும் புகழ்ச்சியையே விரும்புகிறார்கள். மனுஷனால் நாம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டு, தேவன் நம்மை அங்கீகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடிருப் போம். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் போலியாக, மாய்மாலம் பண்ணுகிறவர் களாக இருக்கமாட்டார்கள். உண்மையாக இருப்பார்கள். இயேசு கிறிஸ்துவைக் குறித்து மற்றவர்களுக்கு சாட்சியாக சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருப் பார்கள், பயப்படமாட்டார்கள்.

**மனுஷரின் நிந்தனைக்குப் பயப் படாமலும் அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள்** (ஏசாயா *51:7*). சில மனிதர்கள் நம்மை எப்பொழு தும் குறைசொல்லிக் கொண்டேயிருப் பார்கள். அப்படி அவர்கள் உங்களைப் பற்றிச் சொல்லும் தீயவற்றிற்கு பயப்படா தீர்கள். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் அவருடைய பிள்ளைகளுக்குத்தான் ஏசாயா தீர்க்கதரிசி இதைச் சொல்கிறான். மனிதர்கள் நம்மேல் குற்றம் சுமத்தி வீணாக பழிசொல்லி, நம்மை அவமதிக்கும்போதும், நாம் அந்த மனிதர்களுக்கு பயப்படாமல் கர்த்தரை நம்பி திடனாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏனென்றால் கர்த்தர் நம்மோடுகூட இருக்கிறார். உண்மையை வெளிப்படுத்தி நமக்கு வெற்றியை கொடுப்பார். நீங்கள் கர்த்தரை நம்பியிருப்பதால், ஜனங்கள் உங்களை வெறுக்கலாம். கேலி பண்ணி சிரிக்கலாம். ஆனால், அவர்கள் உங்களுக்கு எதிராக இல்லை. கர்த்தருக்கு எதிராக இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். கர்த்தர் தம்முடைய நீதியை அவர்கள்மேல் நிச்சயமாக விளங்கச் செய்வார். நீங்கள் உங்கள் கவனத்தை தேவன் மேலேயே வைத்திருங்கள். அவரை நேசித்து அவருக்கு கீழ்ப்படிந் திருங்கள். **நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற் கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற் கும் நீ யார்? இடுக்கண் செய்கிறவன் அழிக்க ஆயத்தமாகிறபோது, நீ அவனுடைய உக்கிரத்திற்கு நித்தம் இடைவிடாமல் பயப்படுகிற தென்ன?** (ஏசாயா *51:12,13*). நமக்கு தீமை செய்கிற மனுஷனுக்கு பயப்படா மல், நம்மை தீமையிலிருந்து விடுவிக்க வல்லவராகிய தேவனை நம்பவேண்டும். எப்படிப் பட்ட சூழ்நிலையாயிருந்தாலும்



தேவன் நமக்கு உதவி செய்வதற்கு நம்மோடுகூட இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டோமானால், நாம் மனிதனுக்கு பயப்படமாட்டோம்.

### யூதருக்கு பயந்த பேதுரு

**எப்படியெனில், யாக்கோபினிடத் திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட் டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான்** (கலாத்தியர் *2:12*). சீரியாவின் முக்கிய நகரமாகிய அந்தியோகியா உலகத்திலேயே மிகப் பெரிய பண்டைய வியாபாரஸ்தலமாக இருந்தது. இது கிறிஸ்தவ ஸ்தலமாக மாறியது. பவுலும், பர்னபாவும் இங்கு ஊழியம் செய்தபோது, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட விசுவாசிகளை கிறிஸ்த வர்கள் என்று முதன் முதலில் அழைத்த னர். தொடக்கக்கால சபையில், சபையின் அங்கத்தினர்கள் கொண்டு வந்த உண வுப் பொருட்களை யாவரும் சேர்ந்து ஒன்றாக இருந்து உண்டு வந்தனர். இந்த விருந்து, தொடக்கக்கால சபை ஐக்கியத்தில் முக்கியமான ஒன்றாயிருந் தது.

சபையில் யூத கிறிஸ்தவர்களோடு, புற ஜாதி கிறிஸ்தவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். யூத கிறிஸ்தவர்கள் புறஜாதி கிறிஸ்தவர்களோடுகூட சேர்ந்து சாப்பிட மறுத்தனர். அப்போஸ்தலனா கிய பேதுரு அந்தியோகியாவுக்கு வந்த போது, இந்த யூத, புறஜாதி வேறுபாட் டைப் பாராது, யூதரல்லாதவர்களோடு கூட சேர்ந்து சாப்பிட்டான். ஆனால், எருசலேமி லுள்ள யாக்கோபிடமிருந்து, சில யூதர்கள் அங்கு வந்தபோது, யூதரல்லாதவர்களோடு சேர்ந்து சாப்பிட வில்லை. அவர்களிடமிருந்து விலகி னான். யூதர்களுக்கு பயந்து, பேதுரு மாய்மாலம் பண் ணினான். மற்ற யூதரும் பேதுருவுடன் சேர்ந்து மாயம் பண்ணி னார்கள். அவர்கள் வேதவார்த்தைக்கு மாறாக நடந்தார்கள். அப்போஸ்தல னாகிய பவுல், அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததைக்கண்டு, எல்லோருக்கும் முன்பாக பேதுருவை நோக்கி, யூதனாயிருக்கிற நீர் யூதனைப்போல் வாழாமல், புற ஜாதிகளைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இவ்வாறு இருக்க நீங்கள் எப்படி புற ஜாதி



கிறிஸ்தவர்களை யூதர்கள்போல் வாழவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியும் என்று கேட்டான்.அவர்கள் செய்த தவற்றை நேரடியாக எடுத்துக்கூறி கண்டித்தான். பேதுரு அதற்கு எதிர்த்து பேசவில்லை. தன் தவறை உணர்ந்து கொண்டான்.

இயேசு கிறிஸ்துவோடுகூட இருந்த பேதுரு, சபைத் தலைவனாக இருந்தும் கூட, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட புற ஜாதி கிறிஸ்தவர்களுக்கு இடறலாய் நடந்து கொண்டான். மற்ற யூதர்களும், யாக்கோபும் என்ன நினைப்பார்கள் என்று பயந்து இப்படியாக நடந்து கொண்டான். சபையை கெடுக்கிற பேதுருவின் செயல்களை நேருக்கு நேராக கண்டித்து,

அவனுக்கு எதிர்த்து பவுல் நின்றான். உண்மையான கிறிஸ்தவர்களும் மதத்தலைவர்களும்கூட தவறு செய்கிறார்கள். அதைப்பார்த்து புதிதாய் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களும் கூட ஆண்டவரைவிட்டு வழிவிலகிச் செல்ல ஏதுவாகிறது.

இன்று அநேகர் மனிதர்களுக்கு பயந்து, அவர்கள் செய்த தவறுகளை கண்டும் காணாததுபோல இருந்து விடுகிறார்கள். நாம் அப்படியாக இருக்கக்கூடாது. பவுலைப்போல நேரடியாக கண்டித்து உணர்த்துகிறவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் செய்வது தவறு என்று நேரடியாக கண்டித்தால் தங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு முறிந்துவிடும் என்றும், அவர்களிடமிருந்து கிடைக்கும் நன்மைகள் தங்களுக்கு கிடைக்காமல் போய்விடும் என்றும், கோபித்துக் கொள்வார்கள் என்றும் பயப்படுகிறார்கள். மாய்மாலம் பண்ணுகிறார்கள். எல்லோரிடமும் அவர்களுக்கேற்றபடி நடித்துக் கொண்டிருப்பார்கள். வாழ்நாளெல்லாம் மனிதர்கள் எல்லோரிடமும் இப்படியாக நடிப்பார்கள். கர்த்தருக்கு பயப்படுவதைவிட மனிதர்களுக்கு பிரியமாய் நடப்பதையே விரும்புவார்கள். மனிதர்கள் தங்களை நல்லவர்கள் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு பயந்து, அவர்களுக்கு பிரியமாய் நடப்பார்கள். ஆனால், கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் வேதவார்த்தையின்படி நடப்பார்கள்.

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், வேதாகமக் கல்லூரியில் படித்திருந்தாலும், இரட்சிக்கப்படாமல், பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறாமல், மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெறாமல், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறாமல் இருக்கிற கிறிஸ்தவன் எவனோ, அவனே பக்கவழியாய் வந்த கள்ள சகோதரன் (கலாத்தியர் 2:4). மத சடங்குகளை பின்பற்றுகிறவர்கள். பெயருக்கு கிறிஸ்தவர்களாக வாழ்கிறவர்கள். பேதுரு இந்த கள்ள சகோதரர்களுக்கு பயந்து, அவர்களை பிரியப்படுத்த மாய்மாலம் பண்ணினான். பிரியமானவர்களே! நாம் எப்படியாக இருக்கிறோம்? மனிதர்களுக்கு பயந்து அவர்களை பிரியப்படுத்துவதற்காக மாய்மாலமாய் நடக்கிறோமா? நம் குறைகளை யாராவது சுட்டிக்காட்டினால், பேதுருவைப்போல நம்மை சரிசெய்து கொண்டு தன்னை கண்டித்த பவுலை பேதுரு நேசித்ததுபோல நாமும் அவர்களை நேசிப்போம்.

நம்மை உண்டாக்கின தேவனுக்கு நாம் பயந்து வாழும்போது, ஒரு தீங்கும் நமக்கு வராது. அதனால் நாம் பயப்பட தேவையில்லை. நம் தேவன் சகலத்தையும் அறிந்தவர். நம் யோசனைகளை அவர் அறிந்து வைத்திருக்கிறார். நம் பயங்களை அவர் அறிந்திருக்கிறார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவன். சகல அதிகாரத்தையும் உடையவர். ஆதியும் அந்தமுமானவர். முந்தினவரும் பிந்தினவருமானவர். சேனைகளின் கர்த்தர். யோசனையில் பெரியவர். மகா பரிசுத்தர். எங்கும் நிறைந்தவர். எப்போதும் மரியாதையினாலும், அவர் மீதுள்ள அன்பினாலும், நாம் அவருக்கு பயப்படுகிறோம். வேத வார்த்தையைப் படித்து அதன்படி நாம் வாழ்வதினாலும், தேவனுக்கு பிரியமான காரியங்களைச் செய்து, தீங்குக்கு விலக்கி நம்மை காத்துக் கொள்வதன் மூலம் கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற பய உணர்வுடன் வாழும்போது கர்த்தருக்கு பயந்து வாழ்கிறோம். நாம் பாவம் செய்யும் போதும், மற்றவர்களுக்கு தீங்கு செய்யும் போதும் தேவன் நம்மைவிட்டு விலகி விடுவார். சாத்தான் நம்மை ஆளுகை செய்வான். ஆதலால் பாவத்திற்கு நாம் இடங்கொடாமல் பயபக்தியோடு வாழ வேண்டும். கர்த்தர் ஒருவர் இருக்கிறார் என்ற உணர்வுடன் நாம் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும்.



கர்த்தர் நம்மை நேசிக்கிறார். ஆனால், அவரைத் தேடுபவர்களுக்கு மட்டுமே தன்மை வெளிப்படுத்துவார். நாம் அவரைத் தேடவேண்டும் என்று வாஞ்சிக்கிறார். நம்மை வற்புறுத்தவே மாட்டார்.

தாவீது ராஜா இப்படியாக கூறுகிறான்: **நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்கு செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்** (சங்கீதம் 34:4). பயத்திலிருந்து விடுவிக்க தேவன் மட்டுமே நமக்கு உதவி செய்ய முடியும். அதற்காக நாம் ஜெபிக்க வேண்டும். மனிதர்கள் நமக்கு தீங்கு செய்யும்போது, அது நமக்கு மனக் கலக்கத்தையும், துன்பத் தையும் கொண்டுவரலாம். கர்த்தர் நம் பக்கத்தில் இருக்கும்போது, நாம் எதற்கும் பயப்படக்கூடாது. தேவன்மீது முழுநம்பிக்கையோடு இருப்பவர்கள்தான் வாழ்க்கையில் என்ன போராட்டங்கள், துன்பங்கள், நோய்கள் வந்தாலும் பயப்படவே மாட்டார்கள். நமது வாழ்க்கையில் ஆபத்துக்கள், போராட்டங்கள், தொல்லைகள் வரும்போது, கர்த்தர் நமக்கு உதவி செய்பவராக, பாதுகாப்பவராக அடைக்கலம் தருபவராக, தஞ்சமாக, சமாதானம் தருபவராக, நம்மை காப்பாற்றுகிறவராக, விடுவிக்கிறவராக இருக்கிறார். என்ன அழிவுகள் வந்தாலும் பயப்படாமல் கர்த்தரால் நம்மை பாதுகாக்க முடியும் என்ற விசுவாசத்தோடு இருப்பார்கள். **எனக்கு விரோதமாக சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நான் பயப்படேன்** (சங்கீதம் 3:6). ஒரு படையே என்னை சூழ்ந்தாலும் நான் பயப்படமாட்டேன்; நான் கர்த்தரை நம்பி திடமாயிருப்பேன்; கர்த்தர் என் வலது பக்கத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை என்று தாவீது கூறுகிறான்.

நாம் தொடர்ந்து பயந்து கொண்டிருந்தோமானால் ஒரு நிழலைப் போல நம்மை சூழ்ந்து கொண்டு, முடிவில் நம்மை கட்டுப்படுத்தி சிறைப் படுத்திவிடும். நாம் வெவ்வேறான பயங்களில் சிறைப்பட்டிருக்கிறோம். மனிதர்கள் நம்மை ஏற்றுக் கொள்ள மறுப்பதனால், என்ன செய்வதென்று தெரியாத நேரத்தில், மனிதர்கள் நம்மை சரியாக புரிந்து கொள்ளாதபோது, நோய்கள் வரும்போது பயம் வரலாம். பயத்தை நாம் மேற்கொள்ள வேண்டுமானால், இயேசு கிறிஸ்துவாகிய ஒளி நமக்குள் வரவேண்டும். அப்பொழுது அவர் பயத்திலிருந்து நம்மை காத்து விடுவிப்பார். பயமாகிய இருள் நம்மைவிட்டு அகல இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். சங்கீதக்காரன் இப்படியாகப் பாடுகிறான்: **கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்** சங்கீதம் (27:1).

**தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்** (2 தீமோத்தேயு 1:7). இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வரும்போது, பயம் நம்மை விட்டுபோய் விடும். என்ன காரியம் செய்தாலும் கவனமாக ஆராய்ந்து முடிவு செய்யும் ஆற்றலையும், ஒழுக்கமான சிந்தனைகளையும், புரிந்துகொள்ளும் ஆற்றலையும், தன்னடக்கத்தையும், சுயகட்டுப்பாட்டையும், பணிவையும் ஆவியானவர் தருவார். பயம், பதற்றம், கோபம் வந்தாலும், உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி அமைதியுடன் தோன்றும் ஆற்றலை உடையவர்களாய் மாற்றுவார்.

அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயு, பயத்தினால், ஆட்

கொண்டிருந்தபோது ஆவியின் வரங்களை பெற்றுக் கொள்ளும்படி நினைப்பூட்டி அவனுக்கு உதவினார். ஊழியத்தில் கடினமான பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு நடத்த ஆவியானவரின் நிறைவும், வழிநடத்துதலும் அவசியம் வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் நிறைக்கப்படும்போது, ஆவியின் வரங்களைக் கொடுப்பார். வல்லமையைக் கொடுத்து ஊழியம் செய்வதை சாத்தியமாக்குவார். நம் வாழ்க்கையில் நிகழக் கூடிய சில சம்பவங்கள் நமக்கு பய உணர்வை உண்டு பண்ணலாம் அல்லது இயற்கையாகவே நாம் பயந்த சுபாவத்தை உடையவர்களாக இருக்கலாம். அந்த பயத்தினால் நிறைந்திருக்கும் போது, நாம் ஒரு காரியத்தைச் செய்யலாமா என்று சரியான முடிவை எடுக்க முடியாமல், உறுதியற்ற மனதையுடையவர்களாய் தயக்கத்தோடு இருந்து கொண்டிருக்கலாம். ஆவியானவர் நமக்குள் வரும்போது, ஒன்றை செய்வதற்கான மன வலிமையையும், ஆற்றலையும் சரியான முடிவு எடுக்கும் திறனையும் தருவார்.

தீமோத்தேயு பயந்த சுபாவமுடையவனாக இருந்தான். அவன் ஊழியத்தின் நிமித்தமாக எதிர்ப்புகளையும், கொடுமைகளையும் எதிர்நோக்கும்போது, பயப்படாமல் வெட்கப்படாமல் தைரியமாக இருக்க பவுல் கூறுகிறான். மேலும் பரிசுத்த ஆவியானவரால், அவனுக்கு கொடுக்கப்பட்ட வரங்களான போதிக்கும் வரத்தையும், கற்றுக் கொடுக்கும் வரத்தையும் தைரியமாக பயன்படுத்துமாறு அறிவுரை கூறுகிறான். பரிசுத்த ஆவியானவர், நாம் ஞானமாய், பெலனுள்ளவர்களாக, திடனுள்ளவர்களாக இருக்க நமக்கு உதவி செய்வார். துன்பத்தின் வேளையிலும், நாம் தைரியமாக சாட்சியாக இருப்பதை கர்த்தர் கனப்படுத்துகிறார். மனிதர்கள் நம்மை இப்படியாக பேசிவிடுவார்களோ, எதிராக ஏதாவது செய்து விடுவார்களோ, தப்பாக நினைத்து விடுவார்களோ என்று பயப்படாதீர்கள். நாம் மனிதர்களை பார்ப்பதை விட்டு விட்டு கர்த்தரை மட்டும் நோக்கி பார்க்க வேண்டும்.

ஒருவனுக்கு தேவன்மேல் விசுவாசம் இருந்தால்தான் மனிதனுக்கு பயப்பட மாட்டான். யாரெல்லாம் மனுஷனுக்கு பயப்படுகிறார்களோ, அவர்களுக்கு தேவன்மேல் உள்ள விசுவாசம் பலவீனமானது. தேவன் மீது விசுவாசமுள்ளவர்கள், என் தேவன் எனக்கு துணையாயிருப்பார் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று தைரியத்தோடு இருப்பார்கள். **நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்** (சங்கீதம் *56:3,11*). தாவீதின் வாழ்க்கையில் பயப்படும்படியான சூழ்நிலை வந்தபோது, கர்த்தர் தன்னோடுகூட இருக்கிறார், மனுஷனால் ஒருதீங்கும் செய்ய முடியாது என்று கர்த்தரை நம்பி தைரியத்தோடிருக்கிறான். நாம் வேதத்தைப் படிக்கும்போது, தேவன்மேல் விசுவாசம் வரும். மனுஷனுக்கு பயப்படும் பயம் போய் விடும். கர்த்தருக்கு எப்பொழுதும் பயப்படுகிறவன் பாக்கியவான். மனுஷன் மனம் மாறிக் கொண்டேயிருப்பான். ஒரு நாளுக்கு ஒரு நீதி பேசுவான். மனுஷனுக்கு பயப்படுகிறவன் ஒரு எலிப்பொறியில் எலி மாட்டிக் கொண்டதுபோல, எப்பொழுதும் பயந்துகொண்டேயிருப்பான். வாழ்க்கையை குறித்தும், ஜீவனைக் குறித்தும் பயந்து கொண்டிருப்பான். ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். பயம் இருக்கக்கூடாது. பயந்தால் எந்தக் காரியமும் செய்யமுடியாது. எந்த தொழிலை செய்யும்போதும் பயப்படக் கூடாது. அஜாக்கிரதையாய் செய்யக் கூடாது. கவனமாக செய்ய வேண்டும். கிணறு வெட்டும் வேலை செய்பவர்கள், மின்சாரம் சம்பந்தமாக வேலை பார்ப்பவர்கள், பட்டாசு உற்பத்தி செய்யும் வேலை செய்பவர்கள், உயரமான இடத்திலே கட்டிட வேலை செய்பவர்கள், விமானம் ஓட்டுபவர்கள், போர் வீரர்கள் மற்றும் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் பயப்பட்டார்களென்றால் வாழவோ, வேலை செய்யவோ முடியாது. ஜாக்கிரதையாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். ஆனால், பயப்படக்கூடாது. பயந்தோமென்றால் சமாதானத்தையும், நிம்மதியையும் இழந்து விடுவோம். கடன் வாங்கினவர்கள், தங்களுக்கு கடன் கொடுத்தவர்களுக்கு பயந்து கொண்டேயிருக்க வேண்டும். நாம் வாக்குறுதி கொடுக்கும் போது, நம்மால் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியுமா என்று யோசித்து பார்த்து விட்டு, பின்பு வாக்குறுதி கொடுக்க வேண்டும். இல்லையென்றால், யாருக்கு வாக்குறுதி கொடுத்தோமோ, அவர்கள் நம்மை பார்க்க வரும்போதெல்லாம், நாம் அவர்களுக்குப் பயந்து கொண்டேயிருக்க வேண்டும். பயம் போகவேண்டுமென்றால், தேவன் மீதுள்ள விசுவாசத்தில் வளரவேண்டும். இந்த விசுவாசத்தை தேவனுடைய வார்த்தையைப் படிப்பதினாலேயே பெற்றுக்கொள்ள முடியும் (ரோமர் *10:17*).

கர்த்தர்தாமே நமக்குள்ளே இருக்கிற பயமுள்ள ஆவியை எடுத்துப்போட்டு, அன்பும், பலமும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை கொடுப்பாராக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் கர்த்தர் ஒரு விதையை வைத்திருக்கிறார். அதுதான் அந்த மனிதனுடைய பலம். அதிலிருந்து வரும் ஆற்றலினால்தான் அவன் எல்லாவற்றையும் செய்கிறான். அவன் பேசுவது, கவனிப்பது, யோசிப்பது, செய்வது, நடத்தை எல்லாமே அந்த விதையாகிய பலத்திலிருந்து வெளிப்படும் காரியங்களே.

இந்த காரியங்களுக்கெல்லாம் வேர் போன்ற அல்லது அஸ்திவாரம் போன்ற அந்த பலத்தை ஒவ்வொரு மனிதனும் தெரிந்து கொள்வது நல்லது. ஏனென்றால் தனக்குள் எந்தவிதமான ஆற்றல் இருக்கின்றது, தன்னுடைய தாலந்து என்ன, பலவீனம் என்ன, தான் அதிகமாக வாஞ்சிக்கிற காரியம் என்ன, தான் செல்லும் திசை என்ன, எதை நோக்கி செல்லுகிறான், எதற்காக சென்று கொண்டிருக்கிறான் என்பதையெல்லாம் ஒரு மனிதன் அறிந்து கொள்ளும்போது, இன்னுமாகப் பலப்படுகிறான்; புத்துணர்வு பெறுகிறான். வேகமாகவும் அதே நேரம் உறுதியாக, தீர்மானமாக முன்னேறிச் செல்ல ஆரம்பிக்கிறான். குழப்பம்,பயம், இரண்டு மனது,சந்தேகம் எல்லாம் அவனை விட்டு நீங்குகிறது. உதாரணமாக, நாம் ஒரு பொருள் வைத்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதைப்பற்றிய அறிவு நமக்கு ஓரளவே இருக்கும். அதைப்பற்றி நன்கு தெரிந்த தொழில்நுட்ப வல்லுனர் ஒருவர் நமக்கு அதனுடைய முழு பயன்பாட்டையும் கற்றுத் தருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுது அந்த பொருளைப் பற்றி நாம் நன்கு தெரிந்து கொண்டோம். முக்கியமாக அதன் பயன்பாட்டை நன்கு அறிந்து கொண்டோம். இனி அதை நாம் பயன்படுத்துவது சாதாரணமாகவா இருக்கும்? நிச்சயமாக இல்லை என்றே சொல்வோம். அதே போலத்தான் மனிதர்களாகிய நமக்கும் நம்முடைய பலம் என்ன என்பதைத் தெரிந்தபிறகு நாம் சாதாரணமாக செயல்பட முடியாது. அந்த பலம் நம்மை உந்தித் தள்ளும். முதலாவது நடப்பது, நன்றாக யோசிக்க ஆரம்பிப்போம். ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பு, யாரிடமும் பேசுவதற்கு முன்பு முதலில் நமக்கு நாமே யோசித்து, கற்பனையிலே அதை ஒத்திகை பார்ப்போம். அதனுடைய முடிவு எப்படியாக இருக்கும் என்பதை மனதிலேயே பார்த்துவிடுவோம். இப்பொழுது அந்த யோசனையை செயல்படுத்த ஆரம்பிப்போம். வேகமாகச் செய்வோம். தெளிவாக இருப்போம். ஏனென்றால் இது ஏற்கெனவே நம் மனதில் நடந்து முடிந்து விட்டது. இதனுடைய முடிவு நமக்கு தெரியும். நாம் செய்யும் காரியத்தைக் குறித்து மற்றவர்கள் சொல்லும் ஆலோசனைகளைக் கேட்போம். ஆனால், அதைக்குறித்து முதலில் யோசிப்போம். உடனே செயல்படுத்தமாட்டோம். எப்படியாக யோசிப்போம்? சொன்னது யார்? இந்தக் காரியத்தைக் குறித்த அவரது அறிவும், அனுபவமும் என்ன? அவர் உண்மையுள்ளவரா? இப்படி ஆலோசனை சொன்னவரைக் குறித்து (தகுதி) அதிகமாக யோசித்து, அதன் பின்னரே அவர் சொன்ன ஆலோசனையைக் குறித்து பரிசீலனை செய்வோம்.

யார் நம்மிடம் பேசினாலும், அவர்களது, பேச்சைமாத்திரம் நாம் வெறுமனே கேட்கமாட்டோம். அவர்கள் நம்மிடம் என்ன சொல்ல வருகிறார்கள்? என்பதை உன்னிப்பாகக் கவனிப்போம். அவர்களுக்கும் அவர்களது பேச்சுக்கும் இடையே உள்ள உண்மையை கவனிப்போம். அவரது மொழிமேல் உள்ள ஆளுமையை கவனமாகப் பார்ப்போம். இதற்கும் அப்பாற்பட்டு, அவரது கருத்தை இன்னும் சிறப்பாக எப்படிச் சொல்லலாம் என்பதையும் யோசிப்போம். இந்த காரியங்களெல்லாம் இப்பொழுது நம்மை இன்னும் அதிகமாகப் பலப்படுத்துகிறது. ஒரு புத்தகத்தை படிப்பதிலும் இந்த ஆற்றல் உங்களுக்குள் கிரியை செய்யும். நீங்கள் படிக்கின்ற காரியத்திற்கும் அதை எழுதியுள்ள எழுத்தாளருக்கும் இடையே உள்ள தொடர்பை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பிப்பீர்கள். சொல்ல வருவதை சரியாகச் சொல்லுகிறாரா? அல்லது சற்று தெளிவில்லாமல் இருக்கிறாரா? சுருக்கமாக, நேரிடையாக, எளிமையாகச் சொல்லும் ஆற்றல் இருக்கின்றவரா? அல்லது சொல்ல வந்ததை சுற்றி வளைத்து சொல்கிறாரா? இதே காரியத்தை நாம் எழுதினால் அதை எப்படிச் செய்வோம்? இப்படியெல்லாம் யோசிக்க ஆரம்பிப்பீர்கள். இப்படி நீங்கள் யோசிக்க, யோசிக்க உங்கள் பலம் கூடும். ஏனென்றால், உங்களை நீங்களே நிதானிக்க ஆரம்பிக்கிறீர்கள். நீங்கள் யார்? உங்களது ஆற்றல் என்ன? பலம் என்ன? பலவீனம் என்ன? உங்களால் எந்த அளவு ஒரு காரியத்தை சிறப்பாய் செய்ய முடியும்? எந்தக் காரியத்தை நீங்கள் எடுத்து செய்யக்கூடாது? என்பதையெல்லாம் யோசித்து அதனுடைய பதில்களை உடையவராய் இருப்பீர்கள். ஆனால், இன்னும் பரிபூரணமான, முழுமையான பதில் உங்களுக்கு கிடைக்கவில்லை. யோசனையில் பலப்பட ஆரம்பிப்பீர்கள். தீவிரமாய் யோசிப்பீர்கள். யோசிப்பதற்கு சிரமப்படமாட்டீர்கள். யோசித்ததினால் களைப்படையமாட்டீர்கள். புத்துணர்வே பெறுவீர்கள். அதிக நேரம் யோசித்துக் கொண்டிருக்க மாட்டீர்கள். துரிதமாக யோசித்து முடிவெடுப்பீர்கள். பல கோணங்களில் யோசித்து பார்க்க ஆரம்பிப்பீர்கள். இது எப்படியென்றால், ஒரு கிரிக்கெட் மாட்ச்சை தொலைக்காட்சியில் பல கேமராக்கள் மூலம் பல கோணங்களில் பார்ப்பது போல. இவையெல்லாம் யோசனையில் பலப்படும் காரியம். ஒருவனுடைய பலத்தை அவன் தெரிந்து கொள்ள முற்படும்போது ஏன் முதலில் யோசனையில் தீவிரம், மாறுதல் உண்டாகிறது. **அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்** (நீதிமொழிகள் 23:7).

மனுஷனுடைய யோசனை அல்லது சிந்தனை அல்லது நினைவு எப்படி இருக்கின்றதோ, அப்படியே அவனுடைய குணாதிசயங்களும், நடத்தையும் இருக்கும். யோசனை பலப்படும்போது அவனுடைய நினைவுகள், குணாதிசயங்கள் மற்றும் நடத்தையும் செம்மைப்படும்.

இப்பொழுது இந்த யோசனையின் பலத்தை நாம், நம்மை அதாவது நமது பலத்தைக் குறித்து அறிந்துகொள்ள பயன்படுத்த முற்படுவோம். எதைக்குறித்து அதிகமாக யோசிக்கிறீர்கள்? எதைச் செய்ய அதிகமாக வாஞ்சிக்கிறீர்கள்? மற்றவர்கள் உங்களிடத்திலுள்ள எந்தக் காரியத்தை அதிகமாகப் பாராட்டுகிறார்கள்? இவற்றையெல்லாம் யோசித்துப் பார்ப்பீர்கள்.

உங்களுக்கு உதவியாக இருக்கும்படியாக எனது நண்பருடைய காரியத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். அவருக்கு படம் வரைவது, வண்ணம் தீட்டுதல், இசைக் கருவிகளை வாசிப்பது, எழுதுவது இவற்றில் ஆர்வமுண்டு. அநேக எழுத்தாளர்களுடன், கவிஞர்களுடன், ஓவியர்களுடன், தத்துவத்தையும், மனோதத்துவத்தையும் படித்தவர்களுடன் கலந்து பேசி, பழகி பல காரியங்களைக் கற்றுக் கொண்டார். ஆனால், அவருக்கு என்ன தேவை? அவருடைய பலம் என்ன? அவருடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன? இவைகளைப் பற்றிய கேள்விகளுக்கு அவருக்குப் பதில் கிடைக்கவில்லை. அவருடன் பழகிய மற்ற மனிதர்களால் அவருக்கு இந்த விஷயத்தில் உதவ முடியவில்லை. காலம் செல்லச் செல்ல வாழ்க்கையில் எல்லாவிதத்திலும் தோல்விகளை சந்திக்க ஆரம்பித்தார். கடைசியில் தன்னை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தார். தன்னுடைய வாழ்க்கையில் அவர் செய்த எல்லா பாவங்களையும்

ஆண்டவரிடத்தில் அறிக்கை செய்து மன்னிப்பு கேட்டபோது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, கல்வாரி சிலுவையில் தாம் சிந்திய இரத்தத்தினாலே அவருடைய பாவங்களைக் கழுவி சுத்திகரித்தார்; பரிசுத்தப்படுத்தினார். அதனோடு மட்டுமல்லாமல், தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவரை அபிஷேகித்தார். அந்த அபிஷேகத்தினால் வேதத்தை இரவும் பகலும் படித்தார். வேதத்தை அவர் படிக்க, படிக்க அவருக்குள் இருந்த எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைத்தது. அவர் எப்படியாக உருவாக்கப்பட்டார் (அனுபவங்கள் மூலமாக), கர்த்தர் அவரை பூமியிலே எந்த நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறார், இவருக்குள் கர்த்தர் என்ன விதையை (பலத்தை) வைத்திருக்கிறார் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டார். இப்போது சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும், மன நிறைவோடும் இருக்கிறார்.

நீங்களும் இன்றே உங்களை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முழுமையாக ஒப்புக்கொடுங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கர்த்தரிடம் கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள். அந்த அபிஷேகம், வேதத்தின் மூலம் எல்லாவற்றையும் போதிக்கும். உங்களுடைய பலம், ஆற்றல், கடந்தகால அனுபவங்கள் மூலமாகப் பெற்ற பாடங்கள் (எந்த வழியாக கர்த்தரால் வழிநடத்தப் பட்டீர்கள், ஏன் அப்படியாக வழிநடத்தப் பட்டீர்கள்), உங்களிடம் காணப் படுகிற குறைகள், வாழ்க்கையைப் பற்றிய சரியான கண்ணோட்டம், மற்ற மனிதர்களைப் பற்றிய சரியான மதிப்பீடு, எதை நோக்கி செல்கின்றீர்கள், இப்படி எல்லாவற்றையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

அநேகர், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளார்கள், வேதத்தை தவறாமல் தினமும் படிக்கிறார்களே, இப்படியிருக்க அவர்களெல்லாம் தங்களுடைய பலம், ஆற்றல், நோக்கம், இவற்றையெல்லாம் ஏன் அறியவில்லை என்று நீங்கள் கேட்கலாம்.

நீங்கள் உங்கள் வேதத்தை எப்படி அணுகுகிறீர்கள் என்பது முக்கியம். வேதாகமம் என்பது கர்த்தருடைய புத்தகம்.

ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக் கொண்ட போது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், **தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே** நாங்கள் இடைவிடாமல், தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; **அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது** (1 தெசலோனிக்கேயர் 2:13).

இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். இவை மனிதனால் எழுதப்பட்ட வார்த்தைகள் அல்ல. கர்த்தருடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் வார்த்தைகள். உங்களைக்குறித்து அவர் என்ன நினைக்கிறார், உங்களை எதற்காக இந்த பூமிக்குக் கொண்டு வந்திருக்கிறார், இப்பொழுது உங்கள் வாழ்க்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது, அதற்கானக் காரண காரியங்கள் இப்படி எல்லாவற்றையும் கர்த்தர் தமது வேதத்தின் மூலம் உங்களோடு பேசுவார். எப்படி கண்ணாடியில் உங்களை பார்க்கிறீர்களோ, அப்படி வேதத்திலே உங்களுக்குள்ளே இருக்கும் காரியங்களை நீங்கள் பார்க்கலாம்.

என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.

பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே **உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது** (ஏசாயா 55:8,9).

நாம் வேதத்தை படிக்க ஆரம்பிக்கும் போது, முதலாவது தெரிந்து கொள்ளுகின்றக் காரியம், நம்முடைய நினைவுகளைக் காட்டிலும், வழிகளைக் காட்டிலும் மேலான நினைவுகளையும், வழிகளையும், கர்த்தர் நமக்காக வைத்திருக்கிறார் என்பதே. அவற்றை நாம் அறிந்து கொள்ளவேண்டுமென்றும் விரும்புகிறார்.

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, **நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவிப்பேன்** (எரேமியா 33:3). இதுவரை நாம் அறிந்திராத காரியங்களையும், நம் அறிவிற்கு எட்டமுடியாத



மேலான, பெரிய காரியங்களையும் நமக்கு சொல்ல கர்த்தர் ஆயத்தமாக இருக்கிறார். அவர் எப்போதும் தயார் நிலையிலே உள்ளார். நாம்தான் தயாராக வேண்டும்.

எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; **நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்;** அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி, மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, **தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும், தேவனுக் குரியவைகளை அறியமாட்டான்.** நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால், எங்களுக்கு அருளப்பட்வைகளை அறியும்படிக்கு தேவனிடத்தில் புறப்படுகிற ஆவியையே பெற்றோம். (1 கொரிந்தியர் 2:9-19).

கர்த்தர் நமக்காக செய்துள்ளக் காரியங்களை அறிந்துகொள்ள நம்மை அவருடைய பரிசுத்த ஆவியினாலே அபிஷேகிக்கிறார். எந்த ஞானத்தினால் நம்மையும், உலகத்தையும் உண்டாக்கினாரோ அதே ஞானத்தை அந்த அபிஷேகம் மூலம் நமக்குத் தருகிறார். அவருடைய அந்த அபிஷேகத்தினால் நம்மை நாம் அறிந்து கொள்ளலாம். வேதத்தை நாம் படிக்கும்பொழுது அவருடைய வார்த்தைகளுக்குள்ளாக இருக்கிற எல்லாக் காரியங்களையும் (நம் அறிவுக்கு எட்டாதது) பரிசுத்த ஆவியானவர் நமக்கு விளக்கிச் சொல்வார். ஆபிரகாம், மோசே, யோசேப்பு, தானியேல், எலியா, பவுல், இப்படிப்பட்டத் தம்முடைய பிள்ளைகளிடம் விசேஷித்த விதமான ஆவி, ஞானம், வல்லமை, தாலந்துகள் இப்படி எவற்றையெல்லாம் வைத்தார், அவற்றைக்கொண்டு என்னவெல்லாம் செய்தார் என்பதை நமக்குக் காண்பித்து, நம்மிடம் அவர் கொடுத்துள்ள ஞானம், தாலந்துகள், வரங்கள் இவைகளைக் காண்பிப்பார். எதற்காகக் கொடுத்துள்ளார். நம்மைக்கொண்டு என்ன செய்ய சித்தமாய் இருக்கிறார் என்பதை விளக்கிச் சொல்வார். எந்த அபிஷேகத்தினால் நமக்கு போதிக்கிறாரோ, அதே அபிஷேகத்தினால் எல்லாவற்றையும் செய்ய வைப்பார். இதுவே நமது பெலன். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகச் சொல்லுகிறார்: **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு** (பிலிப்பியர் 4:13).

இயேசு கிறிஸ்து தமது ஆவியினாலே நம்மை நிரப்புகிறார். அவரால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அதையெல்லாம் நம்மைக் கொண்டு செய்யவே அவருடைய ஆவியினால் நிரப்புகிறார். அந்த ஆவியினாலே நம்மைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார். உங்களைக்கொண்டு என்ன செய்ய சித்தமாயிருக்கிறாரோ அதற்கான அபிஷேகம் (ஆற்றல்) உங்களுக்குள்ளே கொடுக்கப்பட்டாயிற்று. நீங்கள் ஜெபிக்கும்பொழுது, கர்த்தர், உங்களுக்குள்ளே எந்த ‘விதை’யை வைத்திருக்கிறார் (பிரத்யேகமாக உங்களுக்குள்ளே கொடுக்கப் பட்டுள்ள வரங்கள், தாலந்துகள், தனித்துவமான குணாதிசயங்கள், வாஞ்சை, தாகம், தரிசனம்) என்பதை பல காரியங்களிலிருந்து பிரித்து காண்பிப்பார். சிலருக்கு ‘உண்மையை’ விதையாகக் கொடுத்திருப்பார். சிலருக்கு ‘பொறுமை’யை விதையாகக் கொடுத்திருப்பார். இன்னும் பார்ப்போமானால், வைராக்கியம், உறுதி, ரசனை, துணிவு, ஞானம், நிர்வகித்தல், இப்படி ஏதாவது ஒன்றை விதையாக வைத்திருப்பார். அந்த விதையிலிருந்து அவர்கள் செயல்படுவார்கள்.

உங்களுக்கு ‘ரசனை’ விதையாகக் கொடுக்கப்பட்டிருக்குமென்றால், நீங்கள் வெறுமனே ரசனையை மட்டும் உபயோகிக்கிறவர்களாக இருக்கமாட்டீர்கள். உங்களது அந்த ரசனை என்ற பலம் பிரதானமான அஸ்திபாரமாக இருக்கும். ஞானம், உண்மை, உறுதி இவை போன்ற மற்ற காரியங்கள் அதனோடுகூட (ரசனை) சேர்ந்து செயல்படும். இதை அறிந்து கொள்ள நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், இதற்காகக் கர்த்தரை நோக்கி ஜெபியுங்கள். கர்த்தர் வேதத்தின் வார்த்தையின் வெளிச்சத்திலே இதை உங்களுக்குக் காண்பிப்பார். ஆமென்!